வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி காந்தி நகர் பகுதி தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், பகுதிச் செயலாளர் பரமசிவம் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர், கழகப் பேச்சாளர் திருமதி.கலைச்செல்வி கலந்து கொண்டு நாடு போற்றும் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறினார்கள். இதில் பகுதி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அரசின் பல்வேறு திட்டங்கள்

மாணவர்களுக்கு உடனிருந்து வழிகாட்டும்! உதவும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மே 10 -

அரசின் பல்வேறு திட்டங்கள் மாணவர்களின் ஒவ்வொரு அடியிலும் உடனிருந்து வழிகாட்டும்; உதவும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளிவந்ததையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பள்ளிக்கல்வி நிறைந்து உயர்கல்விக்குள் அடியெடுத்து வைக்கும் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்!

நமது பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சொன்னதுபோல கல்லூரிக் கனவு, உயர்வுக்குப் படி, சிகரம் தொடு, நான் முதல்வன் என நமது அரசின் திட்டங்கள் அடுத்து உங்களின் ஒவ்வொரு அடியிலும் உடனிருந்து வழிகாட்டும், உதவும்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்கள் விரும்பிய துறைகளைத் தேர்ந்தெடுக்க ஊக்குவிக்க வேண்டும்.

தேர்ச்சி பெற இயலாத மாணவர்களும் துவண்டுவிடாதீர்கள். நீங்களும் உயர் கல்வி பெற்று வாழ்வில் வெற்றி பெற்றே தீருவீர்கள். அதற்கான வாய்ப்புகளை நமது அரசு உறுதிசெய்யும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுத் திறனாளி மாணவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, மே 10 -

மாற்றுத்திறனாளி மாணவர் கீர்த்திவர்மாவுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு உரிய ஏற்பாடு செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.

இரு கைகளும் இன்றி பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 471 மதிப் பெண்கள் எடுத்த மாற்றுத்திறனாளி மாணவர் கீர்த்திவர்மா உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கண்ணீர் வேண்டாம் தம்பி!

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களிடம் உங்களுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட

விவசாய அங்கத்தினர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் மேற்கொண்டார்!

கள்ளக்குறிச்சி, மே 10 -

சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாய அங்கத்தினர்களின் கரும்பு நடவு வயல்களை கள ஆய்வு செய்த பின்பு விவசாய அங்கத்தினர்களுடன் கலந்துரையாடினார்.

அதன் விபரம் வருமாறு:

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 19.5.1961 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 12.02.1967ஆம் ஆண்டு, தினசரி அரவைத்திறனாக 1200 மெ. டன்கள் ஆண்டு அரவைத் திறனுடன் துவங்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டு தினசரி அரவைத்திறனாக 2000 மெ.டன்கள் அரவைத்திறனுடன் மேம்படுத்தப்பட்டது. பின்னர் 1995-96 ஆம் ஆண்டில் தினசரி அரவைத்திறனாக 2500 மெ. டன்கள் அரவைதிறனாக மேம்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த சர்க்கரை ஆலை கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மூங்கில்துறைப்பட்டு பகுதியில் 125 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலையின் விவகார எல்லைப்பகுதி கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

இவ்வாலையின் மொத்த கரும்பு விவசாய அங்கத்தினர்கள் 37870 மற்றும் இவர்களில் சராசரியாக 5500 விவசாய அங்கத்தினர்கள் கரும்பு சாகுபடி செய்து ஆலை அரவைக்கு கரும்பு அனுப்பி வருகிறார்கள்.

கடந்த 2024-25ஆம் அரவைப் பருவத்தில் 3,02,611 மெ.டன்கள் அரவை செய்து 8.28 சதவீத சர்க்கரை கட்டுமானத்தை எய்தியுள்ளது. மேலும் எதிர்வரும் சிறப்பு அரவைப் பருவத்தில் 80,000 மெ. டன்கள் அரவை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது, இதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது. அரவை செய்யப்பட்ட கரும்பிற்கு கரும்பு கிரயத்தொகையாக டன் ஒன்றுக்கு 3151.00 வீதம் ரூ. 95.35 கோடி நிலுவையின்றி விவசாய அங்கத்தினர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு கடந்த 2023-24ஆம் அரவைப் பருவத்தில் ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த அங்கத்தினர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு ஊக்கத் தொகை கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 215/ வீதம் வழங்கப்பட்டு அத்தொகையானது சம்பந்தப்பட்ட அங்கத்தினர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. 2024-25ஆம் அரவைப் பருவத்திற்கு கரும்பு சப்ளை செய்த அங்கத்தினர்களுக்கு தமிழக அரசால் சிறப்பு ஊக்கத் தொகையாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 349/ அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழக அரசால் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை அங்கத்தினர்களுக்கு சுமார் 37.25 கோடி சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2024-25 பருவத்தில் ஆலைக்கு கரும்பு பதிவு செய்துள்ள அங்கத்தினர்களுக்கு தமிழக அரசின் மூலம் நடவு மான்யமாக மத்திய, மாநில அரசின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 78 இலட்சம் அங்கத்தினர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்திலேயே அதிக அளவு கரும்பு பதிவு செய்த சர்க்கரை ஆலையாக உள்ளது. மேலும் தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தின் (SISSTA) மூலம் வழங்கப்படும் விருதினை பெற்று வருகிறது.

ஆலையின் நடப்பு கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ள கரும்பு வயல்கள், அரசால் வழங்கப்பட்டுள்ள மானிய திட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள நிழல்வலை கூட நாற்று உற்பத்தியினையும், நடப்பு ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நமது ஆலைக்கு சுமார் 207 லட்சத்தில் அறிவிக்கப்பட்ட புதிய இயந்திரங்கள் நிறுவும் பணிக்ளையும், இணைமின் திட்ட பணிகள் மற்றும் ஆலையில் எத்தனால் தொழிற்சாலை அமைய உள்ள இடங்களையும் ஆய்வு மேற்கொண்டார்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில்துறைப்பட்டில் நடைபெற்ற மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:

ஆர்.இராஜேந்திரன், சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர், த. அன்பழகன், சர்க்கரைத்துறை இயக்குநர், பிரசாந்த், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர், வசந்தம் க.கார்த்திகேயன், ஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், டிமலையரசன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர், ஆலையின் செயலாட்சியர் கோ.யோக விஷ்ணு, இணைப்பதிவாளர்/செயலாட்சியர், கள்ளக்குறிச்சி I கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்., மூங்கில்துறைப்பட்டு, மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள் ஆலையின் உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், ஆலையின் தொழிற்சங்க பிரதிநிதிகள், ஆலை பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தற்காலிக தினக்கூலி தொழிலாளர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

கடலூர் மஞ்சக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வைப்புநிதி வழங்கும் நிகழ்ச்சி டாக்டர் பிரவீன் அய்யப்பன் தலைமையில் பள்ளி தலைமை ஆசிரியை செந்தமிழ்ச்செல்வி, சுரேஷ்மல் சோர்டியா ஆகியோர் முன்னிலையில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் கலந்து கொண்டு பள்ளிக்கு வைப்பு நிதியாக ரூ.7 லட்சத்தை முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பனிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், கவுன்சிலர் சுமதி ரங்கநாதன், கடலூர் கோல்டன் சிட்டி லயன்ஸ் கிளப் மாவட்ட தலைவர் சண்முகம், கிளப் தலைவர் ஜெயச்சந்திரன், செயலாளர் சேதுராமன், பொருளாளர் விஜயன், மூத்த உறுப்பினர் ரங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தொழுதூரில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், மங்களூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பட்டூர் வீ.அமிர்தலிங்கம், மங்களூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பா.செங்குட்டுவன், திட்டக்குடி நகரச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆலம்பாடி இராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் சி. வெ.கணேசன் தலைமை! எம். எஸ். கணேஷ்குமார் வரவேற்புரை!

கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் செயற்குழுக் கூட்டம்!

சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. – அப்துல் மாலிக் முன்னிலை!

கடலூர், மே 10 -

கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் 7. 5.2025 அன்று நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் வரவேற்றார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், கழக இளைஞரணி துணைச் செயலாளர் மண்டலம் 2 பொறுப்பாளர் அப்துல் மாலிக் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் வார்டு மற்றும் கிளைகளில் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமிப்பது தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் உறுப்பினர் படிவம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வசம் வழங்கப்பட்டது.

மேலும் தொகுதி வாரியாக இளைஞர்களுக்கான வலைதள பயிற்சி கூட்டத்தை உடனடியாக நடத்துவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் துரைராஜ், நாராயணசாமி, சதாம், பாரதிராஜா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தரவள்ளியிடம் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, பகுதி நேர நியாய விலைக்கடைகள் அமைத்தல், நிரந்தர தண்ணீர் பந்தல் ஏற்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை செய்து தர வலியுறுத்தினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வை. மகாவிஷ்ணு
மே 10 (2007)

தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.